பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

30 03 2025 **SUNDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. நீர் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. ஏழை மாணவர்கள் எவ்வித தடையும் இன்றி நீட் தேர்வை எழுத வேண்டும் என்ற நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

3. தமிழக பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள அறிவிப்புகள் விரைவில் நிறைவேற்றப்படும் என்று மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

4. சிரியாவில் புதிய அரசு அமைக்கப்படும் என்று அந்நாட்டு இடைக்கால அதிபர் திரு **Ahmad Al – Sharaa** அறிவித்துள்ளார்.

5. தாஷ்கண்ட் ஓப்பன் செஸ் போட்டியில் இந்தியாவின் **Nihal Sarin** பட்டம் வென்றார்.

>>>>>>><<<<<<<

நீர் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று காலை ஒலிபரப்பான மன்கிபாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - பிரதமர் (1) 52 செகண்ட்ஸ்)*

கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டியில் பங்கேற்ற வீரர் வீராங்கனைகள் 18 தேசிய சாதனைகளை படைத்துள்ளது பாராட்டுதலுக்குரியது என்று பிரதமர் கூறினார்.

*(சவுண்ட் பைட் - பிரதமர் (2) 48 செகண்ட்ஸ்)*

ஜவுளித்துறையில் உருவாகும் கழிவுகளால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - பிரதமர் (3) 65 செகண்ட்ஸ்)*

உடல் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு உதவிடும் யோகக் கலை மற்றும் இந்திய மருத்துவ முறை உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து வருவதாக பிரதமர் குறிப்பிட்டார்.

*(சவுண்ட் பைட் - பிரதமர் (4) 60 செகண்ட்ஸ்)*

பிரதமர் உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>>>>>><<<<<<<

ஏழை மாணவர்கள் எவ்வித தடையும் இன்றி நீட் தேர்வை எழுத வேண்டும் என்ற நோக்கில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியிலிருந்து தொலைபேசி வாயிலாக பேசிய அவர், நாமக்கல் மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ள இந்த பயிற்சி மையத்தை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் 40 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

தமிழக பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள அறிவிப்புகளை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 3 ஆயிரத்து 270 பயனாளிகளுக்கு 74 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசினார்.

அனைத்து மக்களும் பயனடையும் வகையில், பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

**>>>>>>><<<<<<<**

தெலுங்கு, கன்னடம், மராத்தி உள்ளிட்ட மொழிகளை பேசும் மக்களின் புத்தாண்டு தினம் இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

யுகாதி, குடிபடவா, சைத்ர சுக்லாதி போன்ற பெயர்களில் கொண்டாடப்படும் இந்த புத்தாண்டு தினத்தையொட்டி, குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**>>>>>>><<<<<<<**

ராஜஸ்தான் மாநிலம் உருவான தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இத்தினத்தையொட்டி, குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**>>>>>>><<<<<<<**

சிரியாவில் புதிய அரசு அமைக்கப்படும் என்று அந்நாட்டு இடைக்கால அதிபர் திரு **Ahmad Al – Sharaa** அறிவித்துள்ளார்.

23 பேர் கொண்ட புதிய அமைச்சரவையில் முந்தைய இடைக்கால அரசில் அங்கம்வகித்த முக்கிய தலைவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

**>>>>>>><<<<<<<**

தாஷ்கண்ட் ஓப்பன் செஸ் போட்டியில் இந்தியாவின் **Nihal Sarin** பட்டம் வென்றார்.

உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற இப்போட்டியில், எட்டு புள்ளிகளுடன் அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.

>>>>>>><<<<<<<

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி இன்று ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள இப்போட்டி பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்குகிறது.

குவஹாத்தியில் இன்றிரவு மணி 7.30-க்கு தொடங்கவுள்ள மற்றொரு போட்டியில் சென்னை - ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

>>>>>>>END<<<<<<<